பதிவைக்ஸல் 7092/2019 வே.இ.இ சிவகங்கை

அநி(5)

**சென்னை–5, வேளாண்மை இயக்குநர் அலுவலக வேளாண்மை கூடுதல் இயக்குநர் (பணி மேலாண்மை)அவர்களின் செயல்முறை ஆணைகள்** 003638

**பிறப்பிப்பவர்– திரு. ஸ்ரவன் குமார் ஜடாவத், இ.ஆ.ப.,**

**செ. மு. ஆணை எண். அநிபி.8/148211/ 2019** **நாள். 23.03.2022**

வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகம் 11 APR 2022 சிவகங்கை

பொருள்: பணிக்குழு – தமிழ்நாடு அமைச்சுப்பணி – கருணை அடிப்படையில் பணி நியமனம் – திருமதி.பெ.அபர்ணா, இளநிலை உதவியாளர் (பிணையமற்றது) – 11.07.2019 முற்பகல் முதல் பணியில் சேர்ந்தது – இளநிலை உதவியாளர் (பிணையமற்றது) பதவியில் பணிவரன்முறை செய்து ஆணையிடல் – தொடர்பாக.

பார்வை:–

1. இவ்வலுவலக செயல்முறை ஆணை எண். அநிபி6/111006/2017, நாள். 28.06.2019.
2. சிவகங்கை, வேளாண்மை இணை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை எண். அநி1/7092/2019, நாள். 05.07.2019
3. சிவகங்கை, வேளாண்மை இணை இயக்குநரின் கடித எண். அநி1/7092/2019, நாள். 30.11.2019, 26.02.2021, 05.07.2021 மற்றும் 11.08.2021.
4. அரசாணை (நிலை) எண். 48, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1) துறை, நாள். 26.02.2021.

••••••

CT 2674 WATCIN 11/04/2022

**ஆணை:–**

திண்டுக்கல், வேளாண்மை இணை இயக்குநர் கட்டுப்பாட்டில் நத்தம், வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தின் கீழ் செந்துறை, வேளாண்மை விரிவாக்க மையத்தில் கிடங்கு மேலாளர் (தரம்–3) ஆகப் பணிபுரிந்து 29.05.2009 அன்று காலமான திரு. சோ.பெரியரசன் (லேட்) அவர்களின் வாரிசு/ மகள் திருமதி.பெ.அபர்ணா அவர்களுக்கு கருணை அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப்பணியில் ரூ.19500–62000 (Level-8) என்ற ஊதிய விகிதத்தில் தற்காலிக பணியமர்வில் இளநிலை உதவியாளர் (பிணையமற்றது) ஆகப் பணிநியமனம் செய்து பார்வை (1)–இல் காணும் இவ்வலுவலக செயல்முறை ஆணையின்படி சிவகங்கை, வேளாண்மை இணை இயக்குநருக்கு ஒதுக்கீடு செய்து ஆணையிடப்பட்டது.

அனுப்பப்பட்டது நாள்: 12/4/22

2) இதனைத் தொடர்ந்து பார்வை (2)–ல் காணும் செயல்முறை ஆணையின்படி திருமதி.பெ.அபர்ணா அவர்கள் இளநிலை உதவியாளர் (பிணையமற்றது) ஆக 11.07.2019 முற்பகல் சிவகங்கை, வேளாண்மை துணை இயக்குநர் (உ.ப.நி.) அலுவலகத்தில் பணியில் சேர்ந்து கொண்டார்.

(தொடர்ச்சி...)

12/4/22

3) எனவே, கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டு சிவகங்கை, வேளாண்மை துணை இயக்குநர் (உ.ப.நி.) அலுவலகத்தில் **இளநிலை உதவியாளர் (பிணையமற்றது) ஆக 11.07.2019 முற்பகல் பணியில் சேர்ந்து, தற்போது மாறுதலில் சிவகங்கை, வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகத்தில்** பணிபுரிந்து வரும் திருமதி.பெ.அபர்ணா அவர்களின் பணியினை இளநிலை உதவியாளர் (பிணையமற்றது) பதவியில் பார்வை (4)–இல் காணும் அரசாணையின்படி தனியர் பணியில் சேர்ந்த நாளான 11.07.2019 முற்பகல் முதல் வரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

4) மேற்படி, தனியரின் பணியினை வரன்முறைப்படுத்தப்பட்டுள்ளதை தொடர்ந்து, பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து தகுதிகாண் பருவத்தில் வைத்தும், தொடர் மூன்றாண்டு பணிக்காலத்தில் இரண்டாண்டு பணிக்காலத்தினை திருப்திகரமாக நிறைவு செய்ய வேண்டும் எனவும், பவானிசாகர் அடிப்படைப் பயிற்சி முடித்த பின்னரே தகுதிகாண் பருவம் முடித்து ஆணை வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஒம்/– ஸ்வரன் குமார் ஜடாவத்
வேளாண்மை கூடுதல் இயக்குநர் (ப.மே).

பெறுநர்

திருமதி.பெ.அபர்ணா,
இளநிலை உதவியாளர் (பிணையமற்றது),
வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகம்,
சிவகங்கை.

வழி மற்றும் நகல் :–வேளாண்மை இணை இயக்குநர், சிவகங்கை. (பதிவஞ்சலில்)

திருமதி.பெ.அபர்ணா, இளநிலை உதவியாளர் (பி.அ) இன் இணைப்பில் குறிப்பிட்ட 1 முதல் 25 வரையிலான அசல் ஆவணங்கள், தனியரின் பணிப்பதிவேடு – 1 தொகுதி மற்றும் இறந்த அரசு ஊழியரின் பணிப்பதிவேடு – 1 பவுண்ட் வால்யூம் ஆகியவை இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது. இவற்றைப் பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகையினை தனியே பட்டியலிட்டு அளிக்கக் கேட்டுக் கொள்ளப்படுவதுடன், தனியரின் பணிவரன்முறை செய்த விவரம் பணிப்பதிவேட்டில் பதிந்தமைக்கான சான்றும் அளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

நகல்: 'அபபி' பிரிவு, இவ்வலுவலகம்.
நகல்: அநிபி–8 இருப்புக்கோப்பு.

12.04.2022

கண்காணிப்பாளர்